# February 18, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்காவின் நெருக்கடி காரணமாக, கியூபாவில் எரிபொருள் தட்டுப்பாடு முன்னெப்போதும் இல்லாத உச்சத்தை எட்டியுள்ளது.

(i) பெட்ரோல் நிலையங்களில் பல கிலோமீட்டர் தூரத்துக்கு அணி வகுக்கும் வாகன நெரிசலைத் தவிர்க்க, கியூபா அரசு புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆனால், இச்செயலி மூலம் முன்பதிவு செய்யும் வாகன ஓட்டிகளும், எரிபொருள் நிரப்ப இன்னும் பல வாரங்கள் அல்லது மாதங்கள் காத்திருக்க வேண்டிய சூழலே நிலவுகிறது.

(ii) தற்போது பெட்ரோல் நிலையங்களில் ஒரு நாளைக்கு சராசரியாக 50 முதல் 90 நபர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. இதனால், தங்களின் முறை எப்போதும் வரும் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் காத்திருக்கின்றனர் எரிபொருள் நிரப்ப அனுமதி கிடைத்தால்கூட, ஒருமுறை அதிகபட்சமாக 20 லிட்டர் மட்டுமே வழங்கப்படுகிறது. அவசர மருத்துவத் தேவைகளுக்காகச் சிறிதளவு எரிபொருளைச் சேமித்துவைக்க வேண்டிய இக்கட்டான நிலையில் மக்கள் உள்ளனர்.

(iii) அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக வெனிசுலா, மெக்ஸிகோ போன்ற நாடுகளிலிருந்து கியூபாவுக்கு அனுப்பப்படும் கச்சா எண்ணெய் நிறுத்தப்பட்டதே, இந்த நிலைக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

(iv) இதை யொட்டி, வெளிநாட்டு விமானங்களுக்கு எரிபொருள் வழங்க முடியாது என்று கியூபா அறிவித்துள்ளதால், அந்நாட்டின் முக்கிய வருவாய் ஆதாரமான சுற்றுலாத் துறையும் பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.

2. இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலவிவரும் சூழலில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை ரத்து செய்யும் வரலாற்றுச் சிறப்பு மிக்க மசோதா நிறைவேற்றப்பட்டது.

3. தென்னாப்பிரிக்காவில் இறப்புச் சான்றிதழை மின்னணு முறையில் பெற்றபிறகுதான் இறுதிச் சடங்குகளை நடத்த வேண்டும் என்ற அரசின் புதிய சட்ட முன்மொழிவை, அங்குள்ள ஹிந்து மற்றும் முஸ்லிம் அமைப்புகள் கூட்டாக எதிர்த்துள்ளன.

4. உலகின் மொத்த கச்சா எண்ணெய் போக்குவரத்தில் 20 சதவீதத்தைக் கையாளும் முக்கிய நீர்வழியான ஹார்மோஸ் நீரிணையில் ஈரான் கடற்படை பிரம்மாண்ட போர்ப் பயிற்சியைத் தொடங்கியது.

(i) இந்தப் பயிற்சியின் ஒரு பகுதியாக, ஜெனீவாவில் பேச்சுவார்த்தைக்கு மத்தியில், ஹார்மோஸ் நீரிணையில் ஏவுகணை சோதனைகளை நடத்தி ஈரான் பரபரப்பை ஏற்படுத்தியது.

5. அமெரிக்கா- ஈரான் நாடுகளுக்கு இடையே ஸ்விட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற 2-ஆம் கட்ட மறைமுகப் பேச்சுவார்த்தையில், அணுசக்தி விவகாரத்தை எப்படி கையாள்வது என்பது குறித்த அடிப்படை வழிகாட்டு நெறிமுறைகளில் இரு நாடுகளும் ஒரு பொதுவான உடன்பாட்டுக்கு வந்துள்ளன.

(i) இருப்பினும், இப்போதைக்கு முழுமையான ஒப்பந்தம் இறுதியாக வாய்ப்பில்லை என்று ஈரானின் வெளியுறவுத் துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

(ii) ஓமன் நாட்டின் மத்தியஸ்தத்தில், ஜெனீவாவில் உள்ள அந்நாட்டு தூதரகத்தில் சுமார் 4 மணி நேரம் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் அமெரிக்க தரப்பில் அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப், மருமகன் ஜாரெட் குஷ்னர் ஆகியோர் பங்கேற்றனர். ஈரான் சார்பில் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர்.

(iii) பேச்சுவார்த்தையின் முடிவுகள் குறித்த ஆவணங்களை இரு நாடுகளும் பரிமாறிக்கொண்ட பிறகு, மூன்றாம் கட்ட பேச்சுவார்த் தைக்கான தேதி அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6. கர்நாடகத்தில் ஸ்விகி, சொமேட்டோ, ஓலா போன்ற சேவைகள் வழங்கும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் 'கிக்' பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்ய, ஒவ்வொரு சேவையின் போதும் 1 சதவீத நலக் கட்டணம் வசூலிக்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

(i) கர்நாடக மாநிலத்தில் கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்ட 'கிக்' பணியாளர்கள் நலச் சட்டத்தின்படி, 1 முதல் 5 சதவீதம் வரை கட்டணம் வசூலிக்க இடமிருந்தாலும், தற்போதைக்கு குறைந்தபட்ச அளவான ஒரு சதவீதத்தை அரசு நிர்ணயித்துள்ளது.

(ii) இந்தக் கட்டணமானது ஒவ்வொரு சேவைக்கும் ஏற்ப மாறுபட்ட உச்சவரம்பைக் கொண்டுள்ளது. உணவு மற்றும் மளிகைப் பொருள்களின் விநியோக சேவைகளை வழங்கும் ஸ்விகி சொமேட்டோ போன்ற நிறுவனங்களுக்கு ஒரு பரிவர்த்தனைக்கு அதிகபட்சமாக 50 காசு வசூலிக்கப்படும்.

(iii) ஓலா, உபெர் போன்ற வாகனச் சேவை தளங்களில் இருசக்கர வாகனங்களுக்கு 50 காசு, ஆட்டோக்களுக்கு 75 காசு மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு ஒரு ரூபாய் என வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அர்பன் கம்பெனி போன்ற தொழில்முறைகளுக்கு சேவை அதிகபட்சமாக ரூ.1.50 வரை கட்டணம் விதிக்கப்படவுள்ளது.

(iv) இந்தக் கட்டணத்தை சம்பந்தப்பட்ட நிறுவனங்களே தங்கள் காலாண்டு வருவாயின் அடிப்படையில் கணக்கிட வேண்டும். ஒவ்வொரு காலாண்டு முடிந்த 5 வேலை நாள்களுக்குள், அரசு உருவாக்கியுள்ள பிரத்யேக வலைதளம் மூலம் இப்பணத்தைச் செலுத்த வேண்டும்.

(v) இவ்வாறு வசூலிக்கப்படும் நிதி முழுவதும் 'கிக்' பணியாளர்கள் நல வாரியத்தின் மூலம், அவர்களின் மருத்துவ மற்றும் சமூக நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். இந்த நிதி மேலாண்மை குறித்த அனைத்து விவரங்களும் தொழிலாளர் துறையின் வலைதளத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வெளிப்படையாக பதிவேற்றப்படும் என அரசு உறுதியளித்துள்ளது.

7.அரசுத் துறைகளில் காலநிலை நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 'காலநிலை உச்சி மாநாடு 4.0-ஐ தொடங்கி வைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

- ஒவ்வொரு திட்டத்திலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான தடுப்பு மற்றும் தகவமைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும். அந்த வகையில், காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவிலேயே இரண்டாவது இடமும், சூரிய ஒளி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில், நான்காவது இடமும் பெற்று, வளர்ந்து வரும் மாநிலங்களில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

(i) 30 சதவீத மின்சார பேருந்துகள்:

வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் மாநில போக்குவரத்துக் கழகங்களின் கீழ் இயக்கப்படும் பேருந்துகளில் 30 சதவீத பேருந்துகள் மின்சார பேருந்துகளாக இருக்க வேண்டும். இதுதான் தமிழக அரசின் இலக்கு. மின்சார வாகனங்களுக்கு 2027-ஆம் ஆண்டு வரை சாலை வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 294 இடங்களில் 3.09 கோடி கியூபிக் மீட்டர் மரபுக் கழிவுகள் அகற்றப்பட்டிருக்கின்றன. சென்னையில் வெள்ள பாதிப்புகளைத் தவிர்க்க அமைத்திருக்கும் 'ஸ்பாஞ்ச்' பூங்காக்கள் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துகிறது. தமிழ் நாட்டின் பிற பகுதிகளுக்கும் இது விரிவுபடுத்தப்படும்.

(ii) கார்பன் சமநிலை மையங்கள்:

- நீலகிரி, கோவை, விருதுநகர், ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களை, கார்பன் சமநிலை மையங்களாக

மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதல்முறையாக உள்ளூர் மீனவ மக்களைக் கொண்ட 2 'கடல்சார் உயரடுக்கு படைகள்' உருவாக்கப்பட்டிருக்கின்றன.

- தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கத்தின் கீழ், அரிதான கடல்பசு, கடல் ஆமை, பறவைகள் உள்ளிட்ட உயிரினங்களைக் காக்க 6 உயர் சிறப்பு மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அலையாத்தி, சவுக்கு மற்றும் பனைமரங்கள் நடவு செய்யப்பட்டு, கடலோரப் பகுதிகளில், இயற்கைப் பேரிடர்களை தாக்குப்பிடிக்கும் உயிர்க் கேடயங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

(iii) பன்னாட்டு அமைப்புகளுடன் இணைந்து...

- காலநிலை மீள்திறன்மிகு உள்கட்டமைப்புகளை உருவாக்க, அரசுத் துறைகள் அனைத்தும் உலக வங்கி – ஆசிய வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புகளுடன் இணைந்து பசுமை நிதியையும், முதலீட்டையும் ஈர்க்க வேண்டும். அதன் முதல்படியாக, இந்தியாவிலேயே முதல்முறையாக, ரூ.1,000 கோடியில், பசுமைக் கால நிலை நிதியம் உருவாக்கப்பட்டு, சுற்றுச்சூழல் பொருளாதாரம் மற்றும் தூய்மை மற்றும் போக்குவரத்து சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

(iv) காலநிலை நடவடிக்கையுடன் பட்ஜெட்:

- இனிவரும் காலங்களில், அனைத்துத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களையும், காலநிலை நடவடிக்கையுடன் இயைந்து செயல்படுத்தும் விதமாக பட்ஜெட் உருவாக்கப்படும்.
- தமிழ்நாடு முழுவதும் நடவுசெய்ய 5 லட்சம் சந்தன மரக்கன்றுகள் வழங்கப்படும்.
- அரசு தொழிற்சாலைகளும், நிறுவனங்களும் இணைந்து, பசுமைத் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்து, உமிழ்வுகளைக் குறைக்கவும், உள்ளாட்சி அமைப்புகள் காலநிலை நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படவும், இளைஞர்கள் காலநிலைத் தலைவர்களாகவும், தூதுவர்களாகவும் உருவெடுக்கவும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

8. மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.14.57 கோடியில் சென்னை உள்பட 20 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 105 விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையங்களை தலைமைச் செயலகத்தில் இருந்தபடி காணொலி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை திறந்துவைத்தார்.

(i) மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு, உலக வங்கி நிதியுதவியுடன் விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 94 வருவாய் கோட்ட அளவிலான ஒருங்கிணைந்த சேவை மையங்களும், 568 வட்டார ஒருங்கிணைந்த சேவை மையங்களும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன. முதல்கட்டமாக 7 மாவட்டங்களில் 15 வருவாய் கோட்ட அளவிலான ஒருங்கிணைந்த சேவை மையங்களும், 66 வட்டார ஒருங்கிணைந்த சேவை மையங்களும் செயல்பாட்டில் உள்ளன.

(ii) இந்த நிலையில், சென்னை, அரியலூர், கோவை, கடலூர், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், ராமநாதபுரம், சேலம், தஞ்சை, திருப்பத்தூர், திருவள்ளூர், தூத்துக்குடி, விருதுநகர், விழுப்புரம், நீலகிரி, திருவாரூர், புதுக்கோட்டை ஆகிய 20 மாவட்டங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்துள்ள 105 விழுதுகள்-ஒருங்கிணைந்த சேவை மையங்களில், வருவாய் கோட்ட அளவில் 17 மையங்களும், வட்டார அளவில் 88 மையங்களும் அடங்கும்.

(iii) வருவாய் கோட்ட அளவிலான மையங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகளின் நாள்பட்ட மறுவாழ்வு தேவைகளை பூர்த்தி செய்வது, ஒரே இடத்தில் சிறப்புக் கல்வி, கண்பார்வை அளவியல், கேட்டல் மற்றும் பேச்சுப் பயிற்சி, இயன்முறை சிகிச்சை, செயல்முறை சிகிச்சை, உளவியல் சிகிச்சை ஆகிய 6 சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்தச் சேவைகளை வழங்குவதற்குத் தேவையான சிகிச்சை உபகரணங்களுடன், தகுதியான வல்லுநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வல்லுநர்கள், மையங்களில் சேவைகளை வழங்குவதுடன், தேவையெனில் மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கே சென்றும் சேவைகளை வழங்குவார்கள்.

(iv) இதேபோல, வட்டார அளவிலான மையங்கள் வாயிலாகவும் சிறப்புக் கல்வி (தகவல் தொடர்பு பிரச்னைகள் மற்றும் அறிவாற்றல் பிரச்னைகள்), இயன்முறை சிகிச்சை, உளவியல் ஆலோசனை ஆகிய சேவைகளும் வழங்கப்படுகின்றன.

9. பிபிசி-யின் 2025-ஆம் ஆண்டுக்கான சிறந்த இந்திய விளையாட்டு வீராங்கனை விருதை, கிரிக்கெட் நட்சத்திரம் ஸ்மிருதி மந்தனா பெற்றார்.

10. வங்கதேசத்தின் புதிய பிரதமராக வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி) தலைவர் தாரிக் ரஹ்மான் (60) பதவியேற்றார். அடுத்த 5 ஆண்டுகளுக்கு அவர் பிரதமர் பதவியில் தொடரவுள்ளார்.

(i) மொத்தம் 299 தொகுதிகளுக்கு பிப்.12-ஆம் தேதி நடைபெற்ற 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் 209 தொகுதிகளில் பிஎன்பி வெற்றி பெற்றதையடுத்து, தாரிக் ரஹ்மான் பிரதமராக பதவியேற்றார்.

(ii) இதன்மூலம் கடந்த 2024. ஆகஸ்ட் முதல் முகமது யூனுஸ் தலைமையில் செயல்பட்டு வந்த 18 மாத இடைக்கால அரசு முடிவுக்கு வந்தது.

(iii) நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில் புதிய பிரதமராக தாரிக் ரஹ்மானுக்கு அந்நாட்டின் அதிபர் முகமது ஷஹாபுதீன் பதவிப்பிரமா ணம் செய்து வைத்தார்.

(iv) தாரிக் ரஹ்மான் பிரதமராக பதவியேற்ற விழாவில் இந்தியா சார்பில் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா பங்கேற்றார்.

11. செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கை அதிபர் அனுரகுமார திசாநாயக தில்லி வருகை தந்தார்.

(i) தெற்காசிய தலைவர்களில் ஒருவரான இலங்கை அதிபரின் தில்லி வருகை மற்றும் உச்சிமாநாட்டில் பங்கேற்றது இரு நாட்டு உறவின் நெருக்கத்தையும், எதிர்காலத்தை வடிவமைக்கும் விஷயங்களில் ஒன்றாகச் செயல்படுவதற்கான கூட்டுறுதியை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

(ii) நட்பு நாடாக வேரூன்றி, நம்பிக்கையால் வலுப்படுத்தப்பட்டு, நடைமுறை ஒத்துழைப்பால் வழிநடத்தப்படும் இந்தியா - இலங்கை இடையிலான கூட்டணி நல்ல நோக்கத்துடன் தொடர்ந்து மேம்பட்டு வருகிறது என்று அந்தச் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

12. தமிழக சட்டப்பேரவையில், 2026-27-ஆம் நிதியாண்டுக்கு ரூ.47,248 கோடியில் இடைக்கால வேளாண் நிதிநிலை அறிக்கையை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார்.

(i) தமிழக வரலாற்றில் முதல்முறையாக கடந்த 2021-22-ஆம் ஆண்டில் வேளாண் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அப்போது ரூ.34,220 கோடி ஒதுக்கப்பட்டது. இது, 2025-26-ஆம் ஆண்டில் ரூ.45,661 கோடியாக சுமார் ரூ.11,000 கோடிக்கும் மேல் அதிகரிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், கடந்த ஆண்டைவிட நிகழாண்டில் கூடுதலாக ரூ.1,587 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீடு விவரம் :-

- வேளாண்மை - ரூ.11,584.72 கோடி
- தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் - ரூ.1,777.74 கோடி
- வேளாண் பொறியியல் - ரூ.677.02 கோடி
- வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம் - ரூ.278.54 கோடி
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் - ரூ.771.79 கோடி
- விதைச் சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்பு - ரூ.78.41 கோடி
- சர்க்கரை துறை - ரூ.254.84 கோடி

- கால்நடை பராமரிப்பு - ரூ.1,200.20 கோடி
- பால்வளம் - ரூ.850.31 கோடி
- மீன்வளம் - ரூ.1,472.70 கோடி
- தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் - ரூ.397.74 கோடி
- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் - ரூ.50.86 கோடி
- கூட்டுறவுத் துறை (பயிர்க் கடன் போன்றவை) ரூ.701.49 கோடி
- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (நேரடி நெல் கொள்முதல் நிலையம்) - ரூ.14,000 கோடி
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (சாலைகள், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்) - ரூ.6,329.30 கோட
- உணவு பதப்படுத்துதல் - ரூ.177.79 கோடி
- பட்டு வளர்ச்சி - ரூ.114.97 கோட
- வனம் - (வேளாண் காடுகள், மனித-விலங்கு மோதல்)- ரூ.1,527.09 கோடி
- வருவாய் (பயிர்ச் சேதம், உழவர் பாதுகாப்புத் திட்டம்)- ரூ.331.17 கோடி
- கால்வாய்கள் புனரமைப்பு (பெரும் பணிகள்) - ரூ.4,672.04 கோடி.

முக்கிய அம்சங்கள் :-

- கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.707 கோடி ஒதுக்கீடு, 61 லட்சம் விவசாயிகள் பயன்.
- 58,712 ஏக்கர் தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மேம்பாடு.
- மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின்கீழ் 21.35 லட்சம் விவசாயிகள் பயன்.
- நெல் ஜெயராமன் மரபுசார் நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் 900 மெட்ரிக் டன் பாரம்பரிய விதைகள் உற்பத்தி, 70 ஆயிரம் விவசாயிகளுக்கு விநியோகம்.
- தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் 12.84 லட்சம் விவசாயிகள் பயன்.
- ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தின் கீழ் 25 லட்சம் விவசாயிகள் பயன்.
- வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின்கீழ் 77,499 வேளாண் இயந்திரங்கள், 1,320 வேளாண் இயந்திர வாடகை மையங்கள்.
- முதல்வரின் உழவர் நல சேவை மையங்கள் மூலம் வேளாண் பட்டதாரிகளுக்கு ரூ.6 லட்சம் வரை மானியம்.
- ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகளுக்கு 70 சதவீத மானியம், 17,340 பேர் பயன்.
- 2025-26 ஆம் ஆண்டில் தமிழ் நாடு முழுவதும் குறுவைப் பருவத்தில் 12.48 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 3 லட்சம் ஏக்கர் கூடுதல் சாகுபடிப் பரப்பாகும்.
- கடந்த 5 ஆண்டுகளில், இது வரை சுமார் 2 லட்சம் புதிய இலவச மின்சார இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் கூடுதலாக 3.48 லட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்துள்ளது.
- தமிழ்நாடு தேசிய அளவில் மரவள்ளி, மல்லிகை உற்பத்தியில் முதலிடமும், நெல்லி, முட்டைக்கோசு, முள்ளங்கி உற்பத்தித்திறனில் முதலிடமும், மரவள்ளி, மல்லிகை, பலா, கொய்யா உற்பத்தித்திறனில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளது.
- ஐந்து ஆண்டுகளில், மாநிலத்தின் தனித்துவமான விளைபொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 41 விளைபொருள்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளன. இதில், சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலாப்பழம், பண்ருட்டி முந்திரி, விருதுநகர் சம்பா வத்தல், ராமநாதபுரம் சித்திரைக்கார் அரிசி, புளியங்குடி எலுமிச்சை, செட்டிக்குளம் சின்ன வெங்காயம், தூயமல்லி அரிசி, கவுந்தப்பாடி நாட்டு சர்க்கரை ஆகிய 9 விளைபொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது, மீதமுள்ள 32 விளைபொருள்களுக்கு புவிசார் குறியீடு பெற தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- 5 ஆண்டுகளில், 101 புதிய பயிர் ரகங்கள், 21 வேளாண் நுட்பங்கள், 16 புதிய பண்ணைக் கருவிகள் தமிழ்நாடு வேளாண் பல்கலையால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

13. கடந்த ஐந்து ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ரூ.69,087 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

(i) தமிழ்நாட்டில் வரலாறு காணாத வகையில் நடப்பு குறுவைப் பருவத்தில் 14.89 லட்சம் மெட்ரிக் டன் நெல்லும், ஐந்து ஆண்டுகளில் 2.15 கோடி மெட்ரிக் டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

(ii) கூட்டுறவுத் துறை மூலம் ரூ.12,359 கோடி பயிர்க் கடனும், ரூ.4,889 கோடி நகைக் கடனும், சுய உதவிக் குழுக்களின் ரூ.2,118 கோடி கடனும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

(iii) விவசாயிகளுக்கு ரூ.69,087 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(iv) முதல்வர் மருந்தகங்கள் மூலம் இதுவரை ரூ.26 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அதன் வாயிலாக 45 லட்சம்பேர் பயனடைந்துள்ளனர்.

(v) இடைக்கால நிதி நிலை அறிக்கையில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு ரூ.17,068 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

14. தமிழகத்தில் 58,712 ஏக்கர் தரிசு நிலங்கள், விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளதாக இடைக்கால வேளாண் நிதி நிலை அறிக்கையை பேரவையில் தாக்கல் செய்த வேளாண் அமைச்சர் எம்ஆர்கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார். சட்டப்பேரவையில் அவர் வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து பேசியதாவது:

(i) தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சி அடைய 'கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்' அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் இணைந்து 2021-22 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை ரூ.707 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டு 61 லட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

(ii) 6,048 ஏக்கர் தரிசுநிலங்களில் பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களும், 52,664 ஏக்கர் தரிசு நிலங்களில் குறுகிய கால வேளாண்பயிர்களும் என மொத்தம் 58,712 ஏக்கர் தரிசுநிலங்கள் தற்போது சாகுபடி செய்யப்பட்டு, விளைநிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

(iii) தென்னை விவசாயத்தை ஊக்குவிக்க 53 லட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 21 லட்சம் பழச்செடித் தொகுப்புகள் பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 2,115 தனிநபர் ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளுக்கு சாகுபடிக்காக ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

(iv) 10,588 சிறுபாசனக் குளங்கள், ஊருணிகள், வரத்துக்கால்வாய்கள், நீர்சேமிப்புக் கட்டுமானங்கள் தூர்வாரி மேம்படுத்தப்பட்டுள்ளன.

(v) ‘இ-வாடகை’ கைப்பேசி செயலி மூலம் வேளாண்மைப் பொறியியல் துறையின் 3,816 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

(vi) மலர் சாகுபடிப் பரப்பு விரிவாக்கம்: மல்லிகை, ரோஜா, செவ்வந்தி, சாமந்தி, சம்பங்கி போன்ற மலர்கள் மூலம் தினசரி வருமானம் பெற்று விவசாயிகள் பயனடைய அவற்றின் சாகுபடிப் பரப்பு 11,380 ஹெக்டேரில் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதற்கென, ரூ.28 கோடி மானியமாக வழங்கப்பட்டு 18 ஆயிரத்து 130 விவசாயிகள் பயனைடந்துள்ளனர்.

- குடைமிளகாய், கார்னேஷன் போன்ற உயர்மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களை ஆண்டு முழுவதும் பாதுகாப்பான சூழலில் சாகுபடி செய்து அதிக வருவாய் பெற, பசுமைக்குடில், நிழல்வலைக் குடில் சாகுபடி 23.55 லட்சம் சதுர மீட்டரில் ஊக்குவிக்கப்பட்டு 1,756 விவசாயிகளுக்கு ரூ. 91 கோடி மானியம்

வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டின் அத்தியாவசிய வணிகப் பயிரான முந்திரியின் முக்கியத்துவம் கருதி, கடந்த ஐந்து ஆண்டுகளில், 8,400 ஹெக்டேரில் முந்திரிபரப்பு விரிவாக்கத்திட்டம் ரூ.12 கோடி நிதியில் செயல்படுத் தப்பட்டு 9687 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- தென்னை வேர்வாடல் நோய் மீட்புத் திட்டம் 2023-24 மற்றும் 2024-25- ஆம் ஆண்டுகளில், கோவை, திருப்பூர், தேனி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் 3,943 ஹெக்டேரில் செயல்படுத்தப்பட்டது.
- வேர்வாடல் நோய் தாக்கிய மரங்களை வெட்டி அகற்றுதல், தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்குதல் மற்றும் நோய் தாக்கிய தென்னந்தோப்புகளை புத்தாக்கம் செய்ய இடுபொருள்கள் வழங்குதல் போன்ற இனங்கள் ரூ.18.48 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு 6,300 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

(vii) பனை மேம்பாடு:

- மாநில மரமான பனையின் முக்கியத்துவம் கருதி, 2021-22-ஆம்ஆண்டுமுதல் 'பனை மேம்பாட்டு இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில், தோட்டக் கலைத் துறை மூலம் 68 லட்சம் பனை விதைகள், 1.28 லட்சம் பனங்கன்றுகள் விநியோகம், 354 பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிக்கும் கூடங்கள் ஆகிய இனங்கள் செயல்படுத்தப்பட்ட பனை பொருள் வளர்ச்சி வாரியம் மூலம் 1,350 நபர்களுக்கு பனை மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பதற்கான பயிற்சி மற்றும் உபகரணங்கள், 650 மகளிருக்கு பனை ஓலை தயாரிக்கும் பயிற்சி மற்றும் உபகரணங்கள் போன்ற திட்ட இனங்கள் செயல்படுத்தப்பட்டன. மொத்தம் ரூ.9.17 கோடியில் திட்டம் செயல் படுத்தப்பட்டு, 1.45 லட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.
- இவைதவிர, தூத்துக்குடி மாவட்டம், வீரபாண்டியன்பட்டணத்தில் தரமான பனை வெல்லம் உற்பத்திக்கான பொது பயன்பாட்டு மையம் அமைக்கப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில், சுமார் ரூ.80 கோடி மதிப்பிலான பனை பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(viii) 1.86 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல்:

- 2025–26 குறுவை கொள்முதல் பருவத்தில் சன்னரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.156-ம், சாதாரண ரகங்களுக்கு ரூ.131-ம் ஊக்கத்தொகையாக வழங்கி அவற்றின் கொள்முதல் விலை முறையே ரூ.2,545 மற்றும் ரூ.2,500-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- கடந்த 5 ஆண்டுகளில், 1.86 கோடி மெட்ரிக் டன் நெல்கொள் முதல் செய்யப்பட்டு ரூ.2,118 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ix) ரூ.1,094 கோடி ஊக்கத் தொகை:

- 2020-21-ஐ ஒப்பிடுகையில் ஊக்கத்தொகை சன்னரக நெல்லுக்கு 123 சதவீதமும், சாதாரண ரகநெல்லுக்கு 162 சதவீதமும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. 2024-25 அரைவைப் பருவத்தில் சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.349 நிர்ணயிக்கப்பட்டு, கரும்பு விலை டன்னுக்கு ரூ.3,500-ஆக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 5.70 லட்சம் விவசாயிகளுக்கு இதுவரை ரூ.1,094 கோடி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- இவை தவிர, விலை வீழ்ச்சிக் காலங்களில் வருமான இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க இதுவரை மொத்தம் ரூ.96.66 கோடி மதிப்பிலான 12,236 மெட்ரிக் டன் பச்சைப்பயறு, உளுந்து, துவரை ஆகியவை 10,690 விவசாயிகளிடமிருந்து குறைந்த பட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.
- இதுதவிர ரூ.1,600 கோடி மதிப்பிலான 1.47 லட்சம் மெ.டன் கொப்பரை ஒரு லட்சம் விவசாயி களிடமிருந்து குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.
- ராமநாதபுரம் மாவட்டத்தில் மிளகாய்க்கான மதிப்புச் சங்கிலி, திருநெல்வேலி மாவட்டத்தில் முருங்கைக்கான மதிப்புச் சங்கிலி உருவாக்கப்பட்டு விவசாயிகள் ஏற்றுமதி சந்தையுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

- 2012-13 முதல் 2020-21 வரை சராசரியாக 1.36 சதவீதமாக இருந்த தமிழ்நாட்டின் மொத் மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 2021-22 முதல் 2024-25 வரையிலான காலத்தில் 3.03 சதவீதமாக உயர்ந்தது.
- அடிப்படை ஆண்டான 2011-12-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2024-26-ஆம் ஆண்டில் வேளாண்மையில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 9.97 சதவீதம் உயர்ந்துள்ளது. 2011-12-இல் ரூ. 53,756.39 கோடியாக இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 2024-25-இல் ரூ.59,117.08 கோடியாக உயர்ந்துள்ளது என்றார் அவர்.

15. கேழ்வரகு உற்பத்தித் திறனில் தமிழ்நாடு முதலிடத்துக்கு முன்னேறியுள்ளதாக வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

(i) தேசிய அளவில், தமிழ்நாடு கேழ்வரகு உற்பத்தித் திறனில் முதல் இடம், கேழ்வரகு உற்பத்தியில் இரண்டாம் இடம், குறுதானியங்கள் உற்பத்தியில் ஐந்தாம் இடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

16. 2026-27-ஆம் நிதியாண்டுக்கு ரூ.2.55 லட்சம் கோடியில் தமிழக அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார்.

(i) அதில், தமிழகத்தின் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.48,696 கோடியாகவும், நிலுவைக் கடன் சுமை ரூ.10.71 லட்சம் கோடியாகவும் அதிகரிக்கும் என மதிப்பிடுவதாகவும் அவர் தெரிவித்தார். தமிழகத்தின் கடன் சுமை அதிகரித்ததற்கான காரணத்தையும் அமைச்சர் தங்கம் தென்னரசு பட்டியலிட்டார்.

(ii) தமிழகத்தில் விரைவில் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, 2026-27 -ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து பேசியதாவது:

- வரி விதிப்பின் உரிமை மத்திய அரசிடமும், மக்கள் நலனுக்காக பெரும் செலவை ஏற்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுகளிடமும் இருப்பது தான் நிதி தொடர்பான அனைத்துச் சிக்கல்களுக்கும் அடிப்படைக் காரணமாகும்.

(iii) வருவாய்ப் பற்றாக்குறை:

- 2026-27-ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.48,696.32 கோடியாக குறையும் என மதிப்பிடப்படுகிறது.
- வரி வசூலை மேம்படுத்துதல், வரி வசூல் நிர்வாகத் திறனை மேம்படுத்துதல் உள்ளிட்ட வருவாயைப் பெருக்கும் நடவடிக்கைகளால் வருவாய்ப் பற்றாக்குறை 2027-28- இல் ரூ.42,964.61 கோடியாகவும், 2028-29-இல் ரூ.35,115.33 கோடியாகவும் குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இது கூடுதல் மூலதனச் செலவினத்துக்கு வழிவகை செய்யும்.

(iv) கடன் சுமை:

- ரூ. 1,78,308.05 கோடி அளவுக்கு மொத்தக் கடன் பெறத் திட்டமிட்டுள்ளது. இதில், ரூ.60,418,42 கோடி மதிப்பிலான பொதுக் கடனை அரசு திருப்பிச் செலுத்துவதால் அடுத்த ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி நிலுவைக் கடன் ரூ.10,71,770.34 கோடியாக இருக்கும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 26.35 சதவீதமாகும்.
- இது 2027-28-இல் 25.30 சதவீதமாகவும், 2028-29-இல் 25.43 சதவீதமாகவும் மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(v) நலத் திட்டங்கள் தொடரும்:

- தற்போதைய பொருளாதார சூழலில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியைவிட

தமிழகத்தின் வளர்ச்சி அதிகமாக உள்ளது. இதே நிலை நீடிக்குமானால், வள ஆதாரங்களைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் மற்றும் வரி வசூல் திறனை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளால் வருவாய் அதிகரிக்கும். நலத்திட்டங்களுக்கான செலவினங்கள் தொடரும்' என்றார் அவர்.

17. நிதியமைச்சர் தங்கம் தென்னரசு இடைக்கால நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து பேசி யதாவது:

- தமிழகத்தின் பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களை மறுப்பது, மாநில அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கு நிதியை விடுவிக்காமல் நிறுத்துவது, மாநிலங்களுடன் ஆலோசிக்காமல் வரி விகிதங்களைச் சீரமைப்பது, நிபந்தனைகளுடன் திட்டச் செலவினங்களை மேற்கொள்ள கட்டாயப்படுத்துதல் என அனைத்து வழியிலும் தமிழகத்தின் நிதிநிலையில் செயற்கையான நெருக்கடியை மத்திய அரசு ஏற்படுத்துகிறது.

(i) அரசின் கணக்கில் பிடித்தம்:

சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) சீரமைப்பால் நடப்பு ஆண்டில் தமிழகத்துக்கு ரூ.9,600 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. முன்னறிவிப்பில்லாமல் ஜிஎஸ்டி வருவாயில் இருந்து ரூ,1,709 கோடியை ரிசர்வ் வங்கியின் மாநில அரசின் கணக்கில் இருந்து கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் மத்திய அரசு பிடித்தம் செய்தது. ஒதுக்கீடு தமிழகத்துக்கு செய்த மத்திய அரசின் வரிப் பங்கு குறைக்கப்பட்டதால் ரூ.1,202 கோடி இழப்பு ஏற்பட்டது.

(ii) மின் பகிர்மான நிறுவன இழப்பீடு நிதி:

- தமிழ்நாடு மின் பகிர்மான நிறுவனத்துக்கு ரூ.16,290 கோடி இழப்பீடு நிதியை மாநில அரசு வழங்காவிட்டால், மாநில அரசின் அனுமதிக்கப்பட்ட கடன் உச்சவரம்பில் அந்தத் தொகை குறைக்கப்படும் என்று மத்திய அரசு நிபந்தனை விதித்தது.
- மின் பகிர்மான நிறுவனத்துக்கு ரூ.413 கோடி மட்டும் இழப்பு ஏற்பட்டிருந்தபோதிலும், இந்த நிபந்தனையால் மாநில அரசுக்கு ரூ.15,877 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

(iii) மானியம் விடுவிக்க வில்லை:

- ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்துக்கு ரூ.3,548 கோடி, ஜல் ஜீவன் திட்டத்துக்கு ரூ.3,112 கோடி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.2,246 கோடி என மானியத் தொகையை மத்திய அரசு நிறுத்திவைத்துள்ளது.
- சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு மத்திய அரசு அளித்த உறுதியின்படி நிதி அளிக்காததால் தமிழக அரசு ரூ.9,500 கோடி ஒதுக்கியது கடனாகத் தொடர்கிறது.

(iv) பணப் புழக்கம் பாதிப்பு:

- இது போன்ற காரணங்களால்தான் மாநிலத்தின் தமிழகத்தின் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் தொடர்ந்து உயர்ந்து காணப்படுகிறது. இது மாநிலத்தின் கடன் திரட்டும் திறனையும், பணப் புழக்கத்தையும் பாதித்துள்ளது.

18. 16-ஆவது நிதிக் குழுவின் அறிக்கை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை மத்திய அரசு கடந்த பிப்.1-ஆம் தேதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்த அறிக்கை மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

(i) மத்திய வரிகளின் பகிர்ந்த ளிக்கத்தக்க நிதியில் மாநிலங்களுக்கான பங்கை அதிகரிக்க அனைத்து மாநிலங்களும் கோரியிருந்தன. அதுகுறித்து நிதிக் குழுவின் அறிக்கையில் எந்த விதப் பரிந்துரையும் இடம்பெற வில்லை.

(ii) ஒன்பதாவது நிதிக் குழு காலத்தில் தமிழகத்துக்கு வழங்கப்பட்ட பங்கு 7.931 சதவீதமாக இருந்த நிலையில், தற்போது வரை 4.079 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்துக்கு ரூ.3.17 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. இது மாநில அரசின் நிலுவைக் கடனில் சுமார் 33 சதவீதமாகும்.

(iii) 16-ஆவது நிதிக் குழு கேரளத்துக்கு 23.74 சதவீதமும், கர்நாடகத்துக்கு 13.27 சதவீதமும் நிதி உயர்வு அளித்துள்ளது. ஆனால், தமிழகத்துக்கு வெறும் 0.44 சதவீதம் உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

19.இந்தியா, பிரான்ஸ் இடையே பாதுகாப்பு, உயர் தொழில்நுட்பம், முக்கியக் கனிமங்கள் உள்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் 21 ஒப்பந்தங்கள் மற்றும் பூர்வாங்க ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. மும்பையில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் இடையே நடைபெற்ற சந்திப்புக்குப் பின் இந்த ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

(i) தில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தாக்க உச்சி மாநாடு உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக பிரான்ஸ் அதிபர் மேக்ரான் இந்தியாவுக்கு வந்தார்.

(ii) மும்பையில் பிரதமர் மோடி மற்றும் அதிபர் மேக்ரான் இடையிலான இரு தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது இரு தரப்பு உறவை சிறப்புமிக்க உலகளாவிய வியூக கூட்டாண்மை அந்தஸ்துக்கு உயர்த்த ஒப்புக்கொள்ளப்பட்டது.

(iii) பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பம்: முக்கியக் கனிமங்கள், பாதுகாப்பு, உயர்தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுகாதாரம், முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் 21 ஒப்பந்தங்கள் மற்றும் பூர்வாங்க ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

(iv) ஹம்மர் ரக ஏவுகணையை இந்தியாவில் தயாரிக்க பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் மற்றும் பிரான்ஸின் சஃப்ரான் நிறுவனம் இடையிலான ஒப்பந்தம், பரஸ்பர முதலீட்டை ஊக்குவிக்கும் வகையிலான இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தம் உள்ளிட்டவை அடங்கும்.

(v) எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்துக்கு பறக்கும் திறன்படைத்த ஹெச்125 ஹெலிகாப்டர்கள், ஏர்பஸ்-டாடா கூட்டு நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட உள்ளன. கர்நாடக மாநிலம், வேமகலில் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த ஹெலிகாப்டர் ஆலையை, பிரதமர் மோடி, அதிபர் மேக்ரான் ஆகியோர் காணொலி மூலம் திறந்துவைத்தனர்.

- மிக உயரமான இடங்கள் மற்றும் மிகக் கடினமான சூழல்களிலும் சிறப்பாகச் செயல்படும் ஏர்பஸ் ஹெச்125 ஹெலிகாப்டர்களின் தயாரிப்பு, இந்தியாவின் விண்வெளி சார் உற்பத்தித் திறனுக்கு வலுசேர்க்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.